ஒசூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை– திரு.முகம்மது சபீர் ஆலம் ,இ.ஆ.ப.,

ந.க.எண்: 14598/2024/எப்1

நாள். 11.03.2026.

பொருள் – மனைப்பிரிவு– ஒசூர் மாநகராட்சி– ஆவலப்பள்ளி கிராமம் சர்வேஎண்.232/2B3, 232/12–ல் 5185.00 ச.மீ பரப்பளவில் புதிய குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழுமத்தால் திட்ட அனுமதி அளிக்கப்பட்டது– மாநகரட்சியால் இறுதி ஒப்புதல் அளித்து உத்திவிடுதல்–தொடர்பாக.

பார்வை – 1. உறுப்பினர் செயலர்,ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம், ஒசூர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.OOF01K3F/2024/TCP நாள்.23.04.2024
2. திருத்திய தானப்பத்திரம் ஆவணம் எண்.16730/2025, நாள். 26.12.2025
3. மனுதாரரின் விண்ணப்பம் நாள். 09.12.2025
4. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை நகஎண்.12843/2022/டிபி–2 நாள். 20.10.2022.
5. இம்மாமன்றத்தீர்மானம் எண். 1023 , நாள். 26.02.2026

* * * *

உத்திரவு :

ஒசூர் மாநகராட்சி ஆவலப்பள்ளி கிராமம், சர்வேஎண்.232/2B3, 232/12–ல் 5185.00ச.மீ பரப்புள்ள இடத்தில் புதிய குடியிருப்பு மனைப்பிரிவாக அமைக்க மனுதாரரின் விண்ணப்பத்தில் அனுமதி கோரப்பட்டதை தொடர்ந்து பார்வை 1ல் காணும் உறுப்பினர் செயலர், ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம் கடிதத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் எண் ம.வ/ஒபுநவகு(கிமா) SWPNo.62/2024 மற்றும் ம.வ/தி.அ/ஒ.பு.நவ.கு (கிமா) SWPNo.31/2024 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. பார்வை 2ல் காணும் திருத்திய தானப்பத்திரம் ஆவணம் எண். 16730/2025, நாள். 26.12.2025 மூலம் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

பார்வை 3–ல் காணும் மனுதாரரின் விண்ணப்பத்தின்படி உத்தேச மனைப்பிரிவிற்கு மேற்கொள்ளப்படவேண்டிய அடிப்படை கட்டமைப்பு பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு அதற்கு மாநகராட்சி பொறியியல் பிரிவின் மூலம் சான்றளிக்கப்பட்டு அதற்கான மூன்றாம் தரப்பு தரச்சான்றும் சமர்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை 4ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி வரிசை எண்.9ல் மனுதாரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் வடிகால் வசதி மற்றும் இதர அடிப்படை வசதிகளை அடுத்த ஐந்து வருடங்களுக்கு அல்லது 60 சதவிகித

மனைகள் அபிவிருத்தி அடைந்த பின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு விண்ணப்பதாரர்/மனைப்பிரிவு உரிமையாளரைச்சாரும். மேலும், வரிசை எண்.10ல் பராமரிப்பு பணிகளுக்கான திரும்ப செலுத்தக்கூடிய வைப்புத்தொகை ஒரு ஏக்கர் அல்லது அதன் பகுதி பரப்பளவிற்கு ரூ.1.00 இலட்சம் வீதம் வசூலிக்கப்படவேண்டும் என்பதால் காப்பு வைப்புதொகை ரூ.2.00 இலட்சமும், கூராய்வு கட்டணம் ரூ.8000/- மற்றும் மனைப்பிரிவு அனுமதிக்கட்டணம் ரூ.10000/- மும் மற்றும் கொடி நாள் நிதி ரூ.25000/- மாநகராட்சிக்கு மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 5ல் காணும் இம்மாநகராட்சியின் மாமன்றத்தீர்மானத்தில் உத்தேச மனைப்பிரிவிலுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு ஆகியவற்றினை ஒப்படைப்பு செய்யப்பட்டதற்கான பின்னேற்பு மற்றும் உத்தேச மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 1-ல் காணும் உறுப்பினர், செயலர், ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், ஒசூர் அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்படுத்தி மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

இணைப்பு: மனைப்பிரிவு வரைபடம்.

11.3.26

ஆணையாளருக்காக,
ஒசூர் மாநகராட்சி.

11/3/26

பெறுநர்:-

திரு.எம்.மஞ்சுநாத்,
க.எண். 12/23,
12வது மெயின் ரோடு, ஆஞ்சப்பா லேஅவுட், ஜேபி நகர், பெங்களூர்.

நகல்-

1. உறுப்பினர் செயலர், ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம், ஒசூர்
2. வருவாய் ஆய்வர், ஒசூர் மாநகராட்சி – மேற்படி மனைப் பிரிவிற்கு உரிய. காலியிட வரி நிர்ணயம் செய்து அறிக்கை செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.